# இயந்திரங்கள் பயன்பாட்டின் மூலம் வெற்றிக் கண்ட விவசாயி

**முனைவர். ம.அ.வெண்ணிலா, முனைவர். கி.ஜோதிலட்சுமி மற்றும் முனைவர். க.இந்துமதி**

வேளாண்மைத் தொழிலில் ஒரு முக்கியமான பிரச்சனை ஆட் பற்றாக்குறை ஆகும். இந்த ஆட்பற்றாக்குறைக்கு இயந்திரமயமாக்கல் முக்கியமான தீர்வு ஆகும். பண்ணை இயந்திரமயமாக்கலில் வெற்றிக் கண்ட விவசாயி ஜடையன்கொட்டாய் கிராமம், கம்பைநல்லூர், மொரப்பூர் வட்டாரம், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ந.ஜெகதீசன் ஆவார். இவர் பண்ணை இயந்திரங்களை உழவு முதல் அறுவடை வரை உபயோகப்படுத்துகிறார். இவர் பி யூ சி வரை படித்துள்ளார். இவர் ஒரு பெரிய விவசாயி ஆவார். மொத்தம் 14 ஏக்கர் நிலத்தில் மஞ்சள், கரும்பு, மரவள்ளி, தக்காளி, கத்திரி, வெங்காயம் மற்றும் தீவனப்புல் (கோ 4 மற்றும் கோ எப் எஸ் 29) போன்ற பயிர்களை சாகுபடி செய்து வருகின்றார். கடந்த 39 வருடங்களாக இவர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளார். இவர் முதன்முதலில் 1982 – ல் டிராக்டர் வாங்கினார். இதன் பிறகு தீவனப்புல் அறுக்கும் கருவி, தீவனப்புல் நறுக்கும் கருவி, சொட்டு நீர்ப்பாசனம், மஞ்சள் தோண்டும் கருவி, பலவகையான தெளிப்பான்கள் (கையால் இயங்கும் தெளிப்பான், Aspee pola தெளிப்பான் மற்றும் மின்விசையால் இயங்கும் தெளிப்பான்), கால்நடை கொட்டகைகளில் வெயிலின் தாக்கம் தணிக்க சிறிய மழை தூவுவான் கருவி மற்றும் பால் கறவை இயந்திரம் போன்றவற்றை சொந்தமாக வைத்து பயன்படுத்தி வருகின்றார். மேலும் இவர் கிரிஸ்டல் புளூ என்ற சாதனத்தையும் பயன்படுத்தி சிக்கலான நீர் மூலக்கூறுகளை கொண்ட ஆழ்துளை ஊற்று நீரை நவீன தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்பட்ட இச்சாதனத்தின் வழியே செலுத்தும் போது அதன் செயல்திறனால் தாவரங்கள், விலங்குகள், மண் மற்றும் மனிதர்களுக்கு எளிதில் பயன்படும் வகையில் மாற்றி உயிர்ச்சத்துக்களை எளிதில் கிரகிக்ககூடிய தன்மையுடைய நீராக மாற்றி பயன்னடுத்துகிறார்.. இதனால் சொட்டு நீர்ப்பாசனத்தில் அடைப்பு ஏற்படுவதில்லை. அதனை பராமரிக்கும் செலவு குறைகிறது. இவர் கீழ்கண்ட இயந்திரங்களை உபயோகிக்கின்றார்.

| இயந்திரம் | பயன்பாடு |
|---|---|
| டிராக்டர் | பலவகையான இடைவெளியில் பார் அமைக்கும்படி பார் அமைக்கும் கருவியை வடிவமைத்துள்ளார். வெங்காயம் , கம்பு மற்றும் புல் வகைகளுக்கு 2 அடி இடைவெளி, மரவள்ளிக்கு 3 அடி இடைவெளி, கரும்பு மற்றும் மஞ்சள் ஆகிய பயிர்களுக்கு 2 ½ அடி இடைவெளி என பார் அமைக்க ஏதுவாக டிரக்டரிலுள்ள இணைப்பை வடிவமைத்துள்ளார். |
| தெளிப்பான்கள்<br>1.2,10 மற்றும் 15 லிட்டர் கொள்ளலவு உள்ள தெளிப்பான்கள் 2.கையால் இயங்கும் நுண்குழாய் தெளிப்பான் 3.Aspee pola தெளிப்பான் 4.மின்விசையால் இயங்கும் தெளிப்பானகள் போன்றவை | பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கான மருந்துகள் தெளிக்க நுண்ணுட்டச்சத்து தெளிக்க மற்றும் களைக்கொல்லிகள் தெளிக்க பயன்படுத்துகிறார். |
| பால் கறவை இயந்திரம் | ஒரு மணி நேரத்திற்கு 70 லிட்டர் பால் கறக்கலாம். இதனால் பால் கறக்க ஆள் தேவை குறைகிறது. சுகாதார முறையில் பால் கறக்கலாம். |

| | |
|---|---|
| மாட்டு கொட்டகையில் வெயில் தாக்கம் தணிக்க சிறிய மழை தூவுவான் கருவி | வெயில் நேரங்களில் கோடைக்காலத்தில் மாடுகளின் வெப்பத்தை தணிக்க இது பயன்படுகின்றது. இல்லையென்றால் மாடுகளை அடிக்கடி குளிப்பாட்ட வேண்டும். மேலும் காற்று புகாத இலைகளில் வாழும் பாக்டீரியாக்களின் துர்நாற்றத்தை போக்குகிறது. |
| புல் அறுக்கும் கருவி | தீவனப்புல் வகைப் பயிர்கள் அறுவடை செய்ய பயன்படுத்துகிறார். கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் ஆட்களைக் கொண்டு தீவனப் பயிர்களை அறுவடை செய்யும் போது அதிக செலவு ஆகின்றது. எனவே சரியான நேரத்தில் அறுவடை செய்ய இக்கருவி பயன்படுகிறது. |
| தீவனப்புல் நறுக்கும் கருவி | தீவனப்புல்லை கால்நடைகள் உண்ணுவதற்கு ஏற்றவாறு சிறுசிறு துண்டுகளாக நறுக்க பயன்படுத்துகின்றார்.இதனால் கால்நடைகள் மீதம் இல்லாமல் உண்ணுகின்றது. |
| தண்ணீர் தெளிக்கும் கருவி / தெளிப்பு நீர்ப்பாசனம் | நிலக்கடலை, உளுந்து, மற்றும் பச்சைப்பயறு போன்ற பயிரகளின் பாசனத்திற்கு தண்ணீா பற்றாக்குறையாக இருக்கும் போது பயன்படுத்துகிறாா. |
| சொட்டுநீர்ப்பாசனம் | அனைத்து பயிக்களுக்கும் சொட்டுநீர்ப்பாசனம் அமைத்துள்ளார். 2005 ஆம் ஆண்டு முதல் 2012 வரை சுமாா 10 ஏக்கா நிலத்தில் சொட்டுநீர்ப்பாசனம் அமைத்துள்ளாா. |
| மழை தூவுவான் கருவி | சோளம் மற்றும் மக்காச்சோளம் போன்ற உயரமான பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய பயன்படுத்துகின்றார். |
| மஞ்சள் தோண்டும் கருவி | டிராக்டரால் இயங்கும் மஞ்சள் தோண்டும் கருவியினை இவர் வடிவமைத்துள்ளார். இதன் மூலம் சேதாரமில்லாமல் மஞ்சள் அறுவடை செய்ய முடிகின்றது. |
| கிரிஸ்டல் புளு தண்ணீர் சுத்தப்படுத்தும் சாதனம் | தண்ணீரிலுள்ள உப்புத்தன்மையை குறைக்கின்றது. இதனால் பயிர் விளைச்சலின் அளவு 10 முதல் 30 சதம் வரை அதிகரிக்கின்றது. பால் வளம் அதிகமாகின்றது. பசு மற்றும் கன்று உடல் நலத்தை பாதுகாக்கின்றது. மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகின்றது. |

**பயன்கள்**

பண்ணை இயந்திரங்களை அனைத்து பணிகளுக்கும் பயன்படுத்துவதால் இவருக்கு பின் வரும் நன்மைகள் கிடைக்கப்பெற்றன.

1. பண்ணை பணிகளுக்கு 40 சதம் ஆட்களே போதுமானது. 60 சதம் ஆட்தேவை குறைகிறது.
2. இதனால் 60 – 75 சதம் நேரம் மற்றும் 50 – 65 சதம் செலவு குறைகிறது

இவர் இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்து ஏக்கருக்கு தக்காளியில் 30 டன், மக்காச்சோளத்தில் 3.5 டன் மற்றும் கத்தரியில் 24 டன் என அதிக பட்ச மகசூல் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் பல்வேறு வகையான பயிர்களில் உயா சாகுபடி தொழில்நுட்பங்கள், இயற்கை விவசாய முறைகள் மற்றும் பஞ்சகாவ்யா தயாரித்தல் போன்றவற்றை பற்றி சென்னை வானொலி

நிலையம் மூலம கடந்த 6-7 வருடங்களாக பல நிகழ்ச்சிகள் அளித்துள்ளார். தருமபுரி பண்பலையிலும் இவர் வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். மேலும் பஞ்சகாவ்யா தயாரித்து மற்ற விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறார். பஞ்சகாவ்யா லிட்டருக்கு ரூ 60 வீதம் சுமார் 500 – 1000 லிட்டர் வரை வருடத்திற்கு விற்பனை செய்கின்றார்.

மேலும் இவர் தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர் பாசனம் திட்டம் மறறும் அட்மா திட்டம் போன்றவற்றில் 2005 – 2013 வரை மாவட்ட திட்டக்குழு உறுப்பினராக இருந்துள்ளார். பண்ணை இயந்திரங்கள் பயன்பாட்டில் வெற்றிக் கண்ட விவசாயி திரு.ஜெகதீசனுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 18.3.2016 அன்று நடைபெற்ற பண்ணை இயந்திரங்களின் செயல் விளக்க நிகழ்ச்சியில் “**சிறந்த பண்ணை இயந்திர பயனீட்டாளர் விருது**” கிடைக்கப்பெற்றது. ஆட்கள் பற்றாக்குறை உள்ள இந்த காலகட்டத்தில் பண்ணை இயந்திரங்களின் பயன்பாட்டில் முன்னோடி விவசாயியாக உள்ள திரு.ஜெகதீசன் அவர்கள் மற்ற விவசாயிகளுக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாக விளங்குகிறார் என்பதில் ஐயமில்லை.

முகவரி

திரு.ஜெகதீசன்
த/பெ. நல்லியப்பக்கவுண்டர்
ஜடையன்கொட்டாய் கிராமம்,
கம்பைநல்லூர்,
மொரப்பூர் வட்டாரம்
தருமபுரி மாவட்டம்
அலைபேசி : 7667922592

